நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1 செங்கல்பட்டு

**CC No.472/2010**

அ.சா.– 21 திரு. கண்ணன் நாள்–09.05.2023.

**26.10.2022 தேதியிட்ட முதல் விசாரணையின் தொடர்ச்சி.**

2ம் எதிரி வேலுமணி 19.07.2009 அன்று அவருடைய வீட்டில் வைத்து கைது செய்து, அவரிடமிருந்து ஒப்புதல் வாக்குமூலம் பதிவு செய்தும், இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட 25 ஆவணங்களை கைப்பற்றினேன். கைப்பற்றப்பட்ட ஆவணங்களை படிவம் 95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அந்த ஆவணங்களில் அர்ஜீனன், சந்திரன், ஐய்யனார், இளையராஜா, கமருதீன்பீ, இந்திரஜித் ஆகியோர்களுடைய அசல் கடவு சீட்டுகளை கைப்பற்றினேன். **(அந்த கடவு சீட்டுகளானது அதசாஆ 28 முதல் 33 வரை குறியீடு செய்யப்படுகிறது. )**

அதன் பிறகு 2004 ம் வருடத்திய டைரியை கைப்பற்றினேன். கைப்பற்றிய ஆவணங்கள் இந்த வழக்கில் குறியீடு செய்யப்பட்டுள்ளது.

இந்த வழக்கில் சம்மந்தப்பட்ட மற்ற ஆவணங்கள் எழும்பூர் நீதிமன்றத்தில் தொடர்புடைய வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ளதால் அதை கேட்டு பெற வேண்டி முதல் விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

Witness. Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd. R.Reena,
Judicial Magistrate No.I,
Chengalpattu.